ISSN : 2455 - 0531

# இனம்

இனம் இனத்தைச் சேரும்

Mail Id: inamеditor@gmail.com

editor@inamtamil.com

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

UAN.TN03D0061112

International E-Journal of Tamil Studies

இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!

மலர்:5 இதழ்:18 ஆகஸ்ட் 2019

Vol. 5 Issue : 18 August 2019








ஆ.சந்திரன்
எஸ்.கலைச்செல்வம்
ஷா. முஹம்மது அஸ்ரின்
ப.ராகசுதா
சி.விஜயன்

ஆ.மணி
ச.கண்ணதாசன்
இரா. இராஜா
வ.கோபாலகிருஷ்ணன்
மூ.அகல்யா

ம.செந்தில்குமார்
எம்.என்.இக்ராம்
சி.சாவித்ரி
சே.முனியசாமி
க.பாலாஜி

Inam ISSN : 2455 - 0531
UAN.TN03D0061112

# இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
International E-Journal of Tamil Studies

## பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
தமிழ் உதவிப்பேராசிரியர்
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி - 17.

முனைவர் த.சத்தியராஜ்
தமிழ் உதவிப்பேராசிரியர்
ஸ்ரீகிருஷ்ணா ஆதித்யா கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 42.

## ஆலோசனைக் குழு

முனைவர் செ.வை.சண்முகம் (சிதம்பரம்)
முனைவர் சு.இராசாராம் (நாகர்கோயில்)
முனைவர் சிலம்பு நா.செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ந.வேலுச்சாமி (சேலம்)
திரு சு.ஸ்ரீகந்தராசா (ஆஸ்திரேலியா)

## ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் க.பாலாஜி (கோவை)
முனைவர் இரா.குணசீலன் (கோவை)
முனைவர் ந.இராஜேந்திரன் (கோவை)
முனைவர் இரா.இராஜா (திருச்சி)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (தஞ்சாவூர்)
திருமிகு எப்.எச்.அகம்மது சிப்லி (இலங்கை)

இதழாக்கமும் வெளியீடும்
இனம் பதிப்பகம், கோவை
inameditor@gmail.com
www.inamtamil.com
9600370671, 9677821364

ஆகஸ்ட் 2019 மலர் : 5 இதழ் : 18
August 2019 Volume V Issue 18

## உள்ளே ...

### தமிழ்ச் செவ்வியல்

பாட்டு - பத்துப்பாட்டு : பெயர்மாற்ற வரலாறு
The history of the name change pattu to pathuppaattu
முனைவர் ஆ.சந்திரன் | Dr.A.Chandran | 4

சங்க காலத்தில் நிலவிய சாட்சியச் சட்டவியல்
Jurisprudence of Evidence existed in Sangam Age
எஸ்.கலைச்செல்வம்/S. Kalaiselvan | 17

கீழ்க்கணக்கு நூல்களில் ‘இளிவரல்’ மெய்ப்பாடு
The emotion of disgust in keezhkanakku
ஷா. முஹம்மது அஸ்ரின்/S.Mohamed Azrin | 25

தொல்காப்பிய வழி அகத்திணை மாந்தர்கள்
Tolkippian way internal Mankind
ப.ராகசுதா/B.Ragasudha & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 30

பாணர்களின் உணவுப்பொருளாதாரமும் அரசியல் மரபும் (Food Economy of Paanar is Political Tradition)
ல.கு.சு.இராஜ்குமார்/L.K.S.Rajkumar & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 35

பத்துப்பாட்டில் உணவு
Food in Paththuppattu
சி.விஜயன்/ C.Vijayan & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 42

### பக்தி இலக்கியம்

அடியாரைத் தெய்வமாக்கிய மதுரகவியாழ்வாரின் அமுத மொழிகள்
Aṭiyārait teyvamākkiya maturakaviyāḻvāriṉ amuta moḻikaḷ
முனைவர் ஆ.மணி/Dr.A.Mani | 49

மீவியற் புனைவுகளுள் ‘கனவு’ பெறும் இடம் (திருவிளையாடற் புராணத்தை முன்வைத்து)
Dream and the story flow in the supernatural things (Based on the Thiruvilaiyadal Puranam)
முனைவர் ச.கண்ணதாசன்/Dr.S.Kannadasan | 55

## Chief Editors

**Dr.M.Muneesmoorthy**
*Assistant Professor in Tamil*
*Bishop Heber College, Trichy - 17.*

**Dr.T.Sathiyaraj**
*Assistant Professor in Tamil*
*Sri Krishna Adithya College of Arts and Science, Coimbatore - 42.*

## ADVISORY TEAM

Dr.S.V.Shanmugam (Chidambaram)
Dr.S.Rajaram (Nagarkovil)
Dr.Silambu.N.Selvarasu (Pondichery)
Dr.N.Veluchamy (Salem)
Sri S.SriKantharasa (Australia)

## Editorial Team

Dr.A.Mani (Pondichery)
Dr.G.Balaji (Coimbatore)
Dr.R.Gunaseelan (Coimbatore)
Dr.N.Rajendran (Coimbatore)
Dr.R.Raja (Trichy)
Dr.B.Sivamaruthi (Thailand)
Dr.S.Muthuselvam (Madurai)
Dr.S.Vijaya Rajeshwari (Thanjavur)
Thiru.F.H.Ahamed Shibly (Srilanka)

**சூனிய சம்பாஷணையில் புலப்பாட்டு உத்திகள்**
**Expressional Strategies on Cipher Discourse**
முனைவர் இரா. இராஜா/Dr.R.Raja | 65

**பெரியவாச்சான்பிள்ளை உரையில் வினா அமைப்பு**
**Question Structure of Periyavachan Pillai Commentary**
வ.கோபாலகிருஷ்ணன்/V.Gopalakrishnan | 73

### தற்கால இலக்கியம்

**தாயுமானவனாகிய இமையத்தின் பெத்தவன்**
**The mother is the epitome of this (Imayam)**
மூ.அகல்யா / M. Ahalya & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 79

### வரலாறு - சமூகவியல் - புவியியல் - கல்வியியல்

**பன்முக நுண்மதி, மனவெழுச்சி நுண்மதி - பின்னணியும் பிரயோகமும் -**
**Multiculturalism, psychoanalysis (background and application)**
எம்.என்.இக்ராம்/M.N.Ikaram | 84

**ஒப்பிலக்கியம் கற்பித்தல் அணுகுமுறைகள் (திருக்குறள் - வேமன சதகம்)**
**Comparative Teaching Approaches (Thirukkural - Vamana Satakam)**
முனைவர் சி.சாவித்ரி | Dr.Ch.Savithri | 108

**முதுகுளத்தூர் சதாவதானம் சரவணப்பெருமாள் கவிராயர் (பேரர்)**
**Mudukulathur sathavathanam saravanaperumal kavirayar and his erudition**
முனைவர் சே.முனியசாமி / Dr.S.MUNIYASAMY | 122

**சிந்துவெளி - பெருங்கற்காலத் தரவுகளை முன்வைத்துப் பாண்டியரின் தொன்மங்கள்**
**(Pandiyas myth based on the Indus civilization - Megalithic evidences)**
முனைவர் க.பாலாஜி | Dr.G.Balaji | 137

•••

மதிப்பிடப்பெற்றது

# தொல்காப்பிய வழி அகத்திணை மாந்தர்கள்

## Tolkippian way internal Mankind

ப.ராகசுதா/B.Ragasudha[4] & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar[5]

**Abstract :** Tolkippiar describes the sense of coexistence of one and the other as an ingredient, and all other things as a substance. Nachinarkarni also points out that in the field of Economics in Tolkappiyam, internal physics, geometry, physics, and sciences are directly related to the literature of Coimbatore. Intuitive grammar describes the thoughts that arise within the life course.

Date of submission: 2019-06-20
Date of acceptance: 2019-07-24
Date of Publication: 2019-08-05
Corresponding author's
Name: ப.ராகசுதா & முனைவர் ம.செந்தில்குமார்
Email: malaisenthilptp@gmail.com

**Keywords:** Economics in Tolkappiyam, internal physics, Geometry, physics, sciences, Internal Mankind, ப.ராகசுதா, P.Ragasudha, Dr.M.Senthilkumar, தொல்காப்பியர், பொருளதிகாரம், அகத்திணை இயல், களவியல், கற்பியல், செய்யுளியல், முனைவர் ம.செந்தில்குமார்.

**முன்னுரை**

தொல்காப்பியர் ஒருவனும் ஒருத்தியும் கூடி வாழ்கின்ற உள்ள உணர்வை அகப்பொருள் என்றும், அஃதொழிந்த ஏனையெல்லாவற்றையும் புறப்பொருள் என்றும் பகுத்துள்ளார். தொல்காப்பியத்தில் உள்ள பொருளதிகாரம் என்ற பிரிவில் உள்ள அகத்திணை இயல், களவியல், கற்பியல், செய்யுளியல் ஆகியன கோவை இலக்கியத்திற்கு நேரடியாகத் தொடர்பு உடையன எனவும் நச்சினார்க்கியரும் சுட்டுகின்றனர். உயிர்கட்குஅகத்தே எழுகின்ற எண்ணங்களை அகப்பொருள் இலக்கணமாக விளக்குகின்றார்.

**அகத்திணை இயல் கூறுகளை,**

"கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப"(அகத்திணை, நூற்பா.1

என்று விளக்கம் தரும் தொல்காப்பியர் அகத்திணை கூறுபாடுகளாக குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை என ஏழாக பகுத்துள்ளார்.

---

[4] முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர் – 632 115. மின்னஞ்சல் : ragasudhamphil@gmail.com
[5] இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர் – 632 115. மின்னஞ்சல் : malaisenthilptp@gmail.com

அகம் என்பது ஒத்த பண்பு கொண்ட ஒருவனும் ஒருத்தியும் தம்முள் கொள்ளும் அன்பு முறையாகும். அது புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் ஆகியவற்றின் அடிப்படையில் அமைவது. அது தனித்த ஒருவருக்கு என்று சுட்டிக் கூறாத தன்மையைக் கொண்டது. உலகமக்கள் யாவர்க்கும் பொதுவானது எனலாம்.

"மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்
சுட்டி ஒருவர் பெயர்க் கொளப் பெறார்"

என்ற நூற்பா விளக்கம் அளிக்கின்றது.

அன்பின் ஐந்திணை என்பது ஒருவனும் ஒருத்தியும் கொண்ட உள்ளம் ஒத்த தூய காதல் வாழ்க்கையாகும். தலைவன் தலைவி தொடர்பு முறையில் இடம்பெறுகின்ற மாந்தர்களை அகத்திணை மாந்தர் என்பர். அந்த வகையில்தலைவன், தலைவி, தோழி, நற்றாய், செவிலி என்ற ஐவரின் பண்புகள் பற்றிய கருத்துக்களை எடுத்தியம்புவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**தலைவன்**

தலைவனும் தலைவியும் தொல்காப்பியர் கூறும் 'பால் வரைத் தெய்வம்' என்ற ஊழின் துணையால் எதிர்ப்பட்டு மற்றோர் அறியாமல் மறைவில் சேர்தல் களவாகும்.

ஒருவனும் ஒருத்தியுமாக எதிர்ப்பட்டார் இருவர் புனலாடு புல்சாய்ந்ததாற்போலத் தம் தலைமைக் குணங்களை இழந்து மெய்யுறு புணர்ச்சியிற் கூடி மகிழ்வது இயல்பு. இங்ஙனம் கூடியவர்களை தம் வாழ்நாள் முழுவதும் கூடி வாழ்வர் என்ற கட்டாயம் இல்லை.

**ஐயம்**

களவு காலத்தில் தலைவியை முதன் முதலாகக் காணும் போது இவள் தெய்வ மகளோ என்று ஐயுற்ற தலைவனுக்கு கூற்று நிகழும்.

"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கணங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு"(குறள். 1081)

என்று தலைவன் தலைவியின் புறத்தோற்றத்தைக் கண்டு ஐயப்படுவான். பிறகு ஐயுற்றத் தலைவன் ஐயங்களைந்து துணிதற்குரிய கருவிகளாக தலைவியிடம் காணப்படும் நிகழ்வுகளைத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

"வண்டே இழையே வள்ளி பு+வே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சமென்று
அன்னவை பிறவும் ஆங்கண் நிகழ
நின்றவை களையும் கருவி என்ப" (களவியல்.நூற்பா. 4)

இவையெல்லாம் தலைவன் உள்ளத்தில் ஏற்பட்ட ஐயத்தை களையும் கருவிகளாக அமைந்தன. இதனை புறப்பொருள் வெண்பாமாலையும் எடுத்துரைக்கின்றது.

"திருநுதல் வேர;வரும்பும் தேங்கோதை வாடும்
இருநிலத் சேவடியும் தோயும் அரிபரந்த
போகிதழ் உண்கணும் இமைக்கும்
அகுமற்றிவள் அகலிடத் தணங்கே" (புறப்பொருள்வெண்பாமாலை.)

என்பன தலைவனுக்கு தணிவு ஏற்பட காரணமாய் அமைந்தன.

**ஊர்தி**

களவுக்காலத்தில் தலைவியைக் காணச்செல்லும் போதும் சென்று திரும்பும் போதும் தேர், யானை, குதிரை என்ற ஊர்திகளைப் பயன்படுத்தும் இயல்புடையவன்.

"தேரும் யானையுங் குதிரையும் பிறவும்

ஊர்ந்தனர் இயங்கலும் உரியர் என்ப"(பொருளியல். நூற்பா. 17)

களவொழுக்கத்தில் தேர் முதலியவற்றையும் பிறவூர்திகளையும் ஏறிச்சென்று கூடுதலையும் உரியவன் தலைவன் என்று உரையாசிரியர் நச்சினார;க்கினியர் விளக்கம் தருகின்றார்.

இதனை,

'நிலவு மணற் கொட்குமோர; தேருண்டெனவே" (அகநானூறு, பாடல் எண். 20)

என்ற அகநானூற்றுப் பாடல் எடுத்துரைக்கின்றது.

They say that lovers will gave car, elephant, house and such others as conveyances of riding for their journey. இலக்குவனார். களவொழுக்கத்தில் தலைவனுக்கு உள்ள மனநிகழ்வைப் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

**பொருள்வயிற் பிரிதல்**

தலைவியைத் தமரினின்று பெறுதற்கரிய காலத்தில் தலைவன் அனபும் அறனும் இன்பமும் என்பனவற்றை நினைக்காமல் வரைவிடை வைத்து பொருள்வயிற் பிரிவான். அல்லது நாணத்தை விட்டு தமரிடம் முதியோரை அனுப்பி தலைவியை மணம்புரிந்து கொள்ளத் துணிவான்.

"பொருளென மொழிதலும் வரைநிலை யின்றே
காப்புக் கைம் மிகுதல் உண்மையான
அன்பே யறனே யின்ப நாணாடு
துறந்த ஒழுக்கம் பழித்தன் றாகலின்
ஒன்றும் வேண்டா காப்பி னுள்ளே" (பொருளதிகாரம். நூற்பா. 19)

தலைவன் களவுக்காலத்தில் பொருள்வயிற் பிரிய விரும்பகிறென் என்று தலைவியிடம் கூறும்போது அன்பையும், அறத்தையும், இன்பத்தையும் நினைத்து வருத்தபப் படமாட்டான் .ஏனென்றால் இல்வாழ்க்கைக்கு பொருள் இன்றியமையாதவை என்பதை நன்கு உணர்ந்தவன். மேலும்,

"சுறமென மொழிதலும் வரைநிலையின்றே" (பொருளதிகாரம். நூற்பா. 20)

தலைவன் பொருள்வயிற் பிரியும்வழி உடன்போக்கு செல்லத் துணிந்த தலைவிக்குத் தான் போகிறவழி கல்லும் கரடுமாகிய சுறம் என்று கூறி தலைவியைத் தன்னுடன் உடன்னோப்பு அழத்துச் செல்லமாட்டான். ஏனென்றால் தலைவன் பாலைநிலத்தின் கொடுமையை எண்ணி மெல்லயளாகியத் தலைவியால் பாலையின் கொடுமையை தாங்கிக் கொள்ள இயலாது என்று எண்ணும் மனப்பாங்குடையவனாகத் திகழ்கிறான். இதன் மூலம் தலைவன் தலைவி மீது கொண்ட அன்பையும் பொருள் மீது கொண்டப் பற்றையும் உணரமுடிகின்றது.

**தலைவி**

தலைவனைக் களவுக் காலத்தில் முதன்முதலாகக் காணும் போது இவன் மரனோ, குமரனோ என்று ஐயுறுதல் தலைவியிடம் நிகழ்வதில்லை என்பதை தொல்காப்பியம் எடுத்துரைக்கின்றது. தலைவிக்கு அதாவது பெண்களுக்கே உரிய இயல்பான குணங்களாக,

"செறிவும் நிறைவும் செம்மையுஞ் செப்பும்

அறிவும் அருமையும் பெண்பாலான"(பொருளதிகாரம். நூற்பா. 14)

எனும் நூற்பா பெண்களுக்குரித்தான இயல்புகளை எடுத்துரைக்கின்றது. தலைவி அடக்கம், அமைதி, மனம்கோடாமை, எடுத்துரைத்தல், அறிவு, அருமை, அச்சம் போன்ற குணங்களைக் கொண்டவள்.

**பெண்களுக்குரிய பண்புகள்**

தலைவன் தனது பரத்தமையை மறைக்கும் போது தலைவி மடனின்றித் தான் அறிந்ததாகப் பேசுவாள். பெண்களுக்காண பண்புகளாக அச்சம், மடம், நாணம் ஆகிய மூன்றினையும் தொல்காப்பியம் சுட்டுகின்றது.

"அச்சமும் நாணும் மடனுந் துறுத்த

நிச்சமும் பெண்பாற் குரிய என்ப"(களவியல் நூற்பா. 8)

என்ற நூற்பா பெண்களுக்குரிய பண்புகளாக குறிப்பிடுவதைக் காணமுடிகிறது. இதனை தொல்காப்பியர்

"கற்புங் காமமும் நற்பால ஒழுக்கமும்
மெல்லி;யற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்து புறந் தருதலுஞ் சுற்றம் ஓம்பலும்

பிறவும் அன்ன கிழவோன் மாண்புகள்" (கற்பியல் நூற்பா. 11)

கற்பும் காமமுமாகிய இரண்டும் தாய்த்தன்மைக்குரிய குணங்களாகும். கணவன் துன்பத்தால் வருந்துகின்ற போது அவனுக்கு அமைதி மொழி கூறுவதும், நல்லாற்றுப் படுத்துவதும் இன்னோரன்ன பண்புகளுக்கும் இலக்கணமாக அமைபவள் தலைவி என்பதை அறிய முடிகின்றது.

**ஊடல்**

தலைவன் தான் பரத்தையிடம் சென்றுவந்த புறத்தொழுக்கத்தை மறைத்த யான் புது யானை காண்பதற்காகச் சென்று தங்கினென் என்று கூறுவான். அதற்கு தலைவி அந்த யானை நல்ல அழகுடையதாயிருந்தது. (பரத்தை) என்பதை உணர்ந்து பேசுவாள். தலைவனுடைய பரத்தை ஒழுக்கத்தை தான் அறிந்தும் அறியாதாள் போல் அவனிடம் கூடியிருக்கும் போதே அறிந்தவளாகப் பேசும் இயல்புடைய மனப்பக்குவம் உடையவள் என்பதை உணரமுடிகின்றது.

"உடம்பும் உயிரும் வாடியக் கண்ணும்
என்னுற் றனகொல் இவையெனின் அல்லதைக்
கிழவோற் சேர;தல் கிழத்திக்கில்லை"(பொருளதிகாரம். நூற்பா. 8)

தலைவன் பிரிவால் உடலுறுப்பும் உயிரும் பொலிவிழந்து துன்பத்தால் வாட்டமுற்ற போதும் தலைவன் இருக்கும் இடம் சென்று சேர வேண்டும் என்று தலைவி எண்ணமாட்டாள். துலைவன் வருவதாகக் கூறிச்சென்ற பருவம் தொடங்கும் போதே அப்பருவம் முடிந்துவிமட்டது போல தலைவி பேசுவாள். அவ்வாறு கூறுவது தலைவியின் மடன், வருத்தம், மருட்கை போன்ற காரணங்களால் ஏற்படுவதுண்டு. இதனை தலைவன் பிரிவு உணர்ந்த வழி அவனிடம் தான் உயிர் வாழ முடியாது என்று தலைவி கூறுகிறாள்

**முடிவுரை**

தொல்காப்பியர் இயற்றிய பொருளதிகாரத்தில் அகத்திணை, களவியல், கற்பியல், பொருளியல் போன்ற இயல் பகுப்புகள் அமைந்துள்ளன. அவ்வியல்களில் தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய் என அகத்திணை மாந்தர;களைப் படைத்து அவர்களுடைய பண்புகளை படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

**பார்வை நூல்கள்**


- அருணாசலம் பிள்ளை மு. (1994), தொல்காப்பியம் – பொருளதிகாரம் *(உரைவளம்) அகத்திணையியல். மதுரை: மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.*
- பரிமேலழகர் (உரை), (2010) திருக்குறள், சென்னை: பூம்புகார் பதிப்பகம்.
- வேங்கடசாமிநாட்டார், ந. வ. (1969). அகநானூறு (தொகுதி.1,2,3). சென்னை: கழகவெளியீடு.